**செய்தி வெளியீடு எண்: 313** **நாள்: 05.05.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (5.5.2020) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள அம்மா மாளிகையில், சென்னை மாநகரில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டத்திற்கு பிறகு ஆற்றிய உரை.

பொதுமக்கள் அனைவருக்கும் பணிவான வணக்கம்,

உலகையே உலுக்கி, அச்சுறுத்தி, உரையவைத்த கொடிய நோய் கொரோனா வைரஸ் நோய். வல்லரசு நாடுகளிலிருந்து, வளந்து வரும் நாடுகள் வரை பல்லாயிரக்கணக்கான பேர் இந்த நோயினால் இறந்துள்ளார்கள். அப்படி வல்லரசு நாடுகளே, வளர்ந்த நாடுகளே கட்டுப்படுத்த முடியாத, பரவிக்கொண்டுக்கின்ற இந்த சூழ்நிலையிலே, தமிழத்திலே இந்த கொரோனா வைரஸ் நோயை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசு பல்வேறு போர்கால நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இன்றைக்கு தமிழகத்தை பொறுத்த வரைக்கும் மத்திய அரசு அறிவித்த வழிகாட்டுதல்களின்படி, நோய்பரவலைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த நோய் பரவலைத் தடுப்பதற்கு என் தலைமையிலே 14 முறை ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. உயர்திரு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அந்த உயர் மட்டக்குழுவும் பல்வேறு முறை ஆலோசனை கூட்டங்களை நடத்தி முடித்திருக்கின்றன. அதேபோல, நோய் பரவலைத் தடுப்பதற்கு, 12 குழுக்கள் அமைக்கப்பட்டன. எல்லா குழுக்களிலுமே தனித்தனியாக தங்களுடைய பணியை துவக்கி சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. எல்லா குழுவிலும் துறை செயலாளர் அந்தஸ்திலே நியமிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலும் இரண்டு மூன்று ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் நியமித்து இருக்கின்றோம்.

அதோடு, பல்வேறு மருத்துவமனைகளிலே நோய் தொற்று உள்ளவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். தமிழகம் முழுவதும் நோய் பரவுதலை தடுக்க

வேண்டும் என்பதற்காக, மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த குழுக்களிலே இந்திய ஆட்சிப் பணியாளர்கள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களிலே அவர்கள் நேரடியாகச் சென்று முறையாக சிகிச்சை அளிக்கப்படுகின்றதா, அதோடு அந்தப் பகுதியில் நோய் பரவல் எவ்வாறு தடுக்கப்படுகின்றது என்றெல்லாம் உடனுக்குடன் நேரடியாக கவனித்து, நடவடிக்கை எடுத்து, நோய் பரவாமல் தடுக்கின்ற பணியில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

அதோடு, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே காணொலி காட்சி மூலமாக தொடர்பு கொண்டு 4 முறை ஆலோசனை நடத்தியிருக்கின்றேன். இந்த ஆலோசனைக் கூட்டத்தில், அரசு கொடுத்த ஆலோசனையின்படி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அந்தந்த மாவட்டத்திலேயே சிறப்பாக பணியாற்றியதன் விளைவு, புறநகர் மாவட்ட பகுதிகளிலே இந்த நோய் பரவல் வெகுவாக குறைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் தடையில்லாமல் கிடைப்பதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரைக்கும், சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, நோய் பரவலை தடுப்பதற்கு உண்டான முயற்சியை எடுத்து வருகிறார்கள். அவர்களுக்குத் துணையாக முதற்கட்டமாக மூன்று இந்திய ஆட்சிப் பணியாளர்களை நியமித்தோம், அவர்கள் 3 Region–க்கு நியமிக்கப்பட்டு அந்தப் பணிகளை துவங்கினார்கள். அவர்களுக்கு உதவியாக 10 குழுக்கள் அமைக்கப்பட்டு, 10 குழுக்களிலுமே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் நியமித்தோம். அவர்களோடு DRO அந்தஸ்தில் உள்ள அதிகாரிகளை நியமித்தோம். மருத்துவ இணை இயக்குநர்கள் அவர்களோடு இணைக்கப்பட்டு அவர்கள், அந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இந்தப் பணி செம்மையாக நடைபெறுவதற்காக, காவல்துறை உயர் அதிகாரிகள். ADGP அந்தஸ்தில் உள்ள 4 பேரை நியமித்துள்ளோம். அனைத்திற்கும் தலைமை ஏற்று,

இந்த கொரோனா வைரஸ் நோயை சென்னை மாநகரத்திலே கட்டுப்படுத்துவதற்கு, CRA அவர்கள் சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த குழுவிலே இடம்பெற்றுள்ள அனைத்து ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளும் இன்றைக்கு Zone wise ஆக பணிகளை முடுக்கிவிட்டு, இந்த கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் மக்களுக்கு இருக்கின்ற பிரச்சனைகளை அறிந்துகொள்வதற்காக, கட்டுப்பாட்டு அறை ஒன்று துவக்கப்பட்டு, அந்த கட்டுப்பாட்டு அறையிலே சென்னை மாநகர மக்கள் தங்களுக்கு உள்ள பிரச்சனைகளை தெரிவிக்கின்ற போது, உடனடியாக அந்தப் பிரச்சனை தீர்ப்பதற்கு வழிவகை செய்யப்படுகின்றது. அவர்கள் ஏதாவது நோய்வாய்ப்பட்டு, நோய் அறிகுறிகள் இருந்தால் உடனடியாக கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவிக்கின்றார்கள். அந்த கட்டுப்பாட்டு அறையிலே, பல மருத்துவர்களையும் ஈடுபடுத்தி இருக்கின்றோம். அந்த மருத்துவர்கள் தகுந்த ஆலோசனை வழங்குகிறார்கள். அதோடு, இன்றைக்கு இந்த கட்டுப்பாட்டு அறையின் மூலமாக, சென்னை மாநகரப் பகுதியிலே, அவர்களுக்கு ஏதாவது பிரச்சனை இருந்தால் அவர்கள் இந்த கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவிக்கின்ற போது, உடனடியாக அந்தக் கட்டுப்பாட்டு அறையில் பணியாற்றக் கூடியவர்கள், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்து, அந்தப் பிரச்சனையை தீர்க்கக்கூடிய வழிமுறைகளையும் நாங்கள் ஏற்பாடு செய்து கொடுத்திருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்கு மற்ற மாநிலத்தைக் காட்டிலும் தமிழகத்திலே இந்த நோய் பரவலைத் தடுப்பதற்கு கடுமையான முயற்சியை நாம் மேற்கொண்டிருக்கின்றோம் என்பதை இந்த நேரத்தில் மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் வேகமாக பரவுவதற்கு காரணம், அதிகமாக மக்கள் நிறைந்த நகரம், தமிழகத்திற்கு தலைநகரமாக விளங்குவது சென்னை மாநகரம். குறுகலான

தெரு, அதிகமான மக்கள் வசிக்கின்ற பகுதி, இதனால் எளிதாக நோய் ஒருவரிடமிருந்து மற்றவரிடம் பரவிவிடுகிறது. அதோடு, பொதுக்கழிப்பறைகளை அதிகமாக பயன்படுத்துகின்றார்கள். இதனால், தொற்று எளிதாக பரவிவிடுகின்றது. இதை எல்லாம் கட்டுப்படுத்துவதற்கு, சென்னை மாநகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த தடை செய்யப்பட்ட பகுதிகளில் தினந்தோறும் காலையிலும், மதியமும், மாலையிலும் மூன்று நேரங்களிலும் கிருமி நாசினி அடிக்கப்படுகின்றது. பொதுக்கழிப்பறைகள் அடிக்கடி சுத்தம் செய்யப்படுகின்றது. தடைசெய்யப்பட்ட பகுதிகளில் இருக்கின்ற மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் நேரடியாக வழங்கப்படுகின்றன. அதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிப்பதற்கு உண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இன்றைக்கு நடமாடும் பரிசோதனை வாகனம் அவர்கள் வசிக்கின்ற இடங்களுக்கே செல்கின்றது. இன்றைக்கு சென்னையிலே இந்த வசதிகள் முழுமையாக ஈடுபடுத்தப்படுகின்றது.

ஏன்னென்றால் சென்னையிலே மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் மருத்துவமனைக்கு வந்து, பரிசோதனை செய்வது என்பது ஒரு கடினமானது என்ற காரணத்தினாலே, அவர்கள் வசிக்கின்ற பகுதிக்கே இந்த பரிசோதனை வாகனம் சென்று, அவர்களை பரிசோதனை செய்து, பரிசோதனை செய்கின்ற போது, நோய் அறிகுறிகள் இருந்தால் அவர்களை அழைத்து சென்று மருத்துவமனையில் சேர்த்து உரிய சிகிச்சை அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தை பொறுத்தவரைக்கும், இதுவரைக்கும் 1724 பேர் இந்த கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 267 பேர். இறந்தவர்களின் எண்ணிக்கை 19 பேர். ஆக, இன்றைக்கு அரசு சரியான முறையிலே நடவடிக்கை எடுத்ததன் காரணமாக குணம்

அடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இறப்பு எண்ணிக்கை குறைக்கப்பட்டு இருக்கிறது.

தற்போது சென்னை மாநகரத்திலே, திரு.வி.க. நகரிலே 356 பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். கோடம்பாக்கத்திலே 257 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அண்ணாநகரில் 141 பேர், வளசரவாக்கத்திலே 114 பேர், இராயபுரத்தில் 299 பேர், தேனாப்பேட்டையில் 206 பேர், தண்டையார்பேட்டையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் உரிய முறையிலே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு சிகிச்சை அளிக்கப்படுவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக சென்னை மாநகரத்தில் மட்டும் 4000 படுக்கை வசதிகள் கூடிய மருத்துவமனை தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதோடு இந்த நோயை கட்டுப்படுத்துவதற்காக, நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் உருவாக்க வேண்டும் என்பதற்காக, Zinc மற்றும் வைட்டமின் மாத்திரைகள் அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. அதோடு, கபசுர குடிநீர் வழங்கப்படுகிறது. நிலவேம்பு கஷாயம் வழங்கப்படுகிறது. இதையெல்லாம் அவர்கள் அருந்துகின்ற போது நோய் எதிர்ப்பு சக்தி பெறக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, நோய் பரவலை தடுக்க முடியும்.

மத்திய சுகாதாரக் குழு தமிழகத்திற்கு வந்து பார்வையிட்டு தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கைகளை பாராட்டிவிட்டு சென்றிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், பரிசோதனையை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முழுவதும் 50 பரிசோதனை மையங்கள் இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. 50 பரிசோதனை நிலையங்களின் மூலமாக நாளொன்றுக்கு சுமார் 12 ஆயிரம் பேர் பரிசோதனை

செய்கின்றோம். இவ்வளவு பேர் பரிசோதனை செய்கின்ற காரணத்தினால் தான் நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. அதனால் மக்கள் அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. இன்றைக்கு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் தான் பரிசோதனை மையங்கள் அதிகமாக இருக்கின்றன.

அதேபோல பரிசோதனை செய்பவர்களின் எண்ணிக்கையும் இன்றைக்கு அதிகரிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, நோய் அறிகுறிகள் உள்ளவர்களை கண்டறிந்து அவர்களுக்கு உண்டான சிகிச்சையை அம்மாவுடைய அரசு செய்து கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆகவே, அரசை பொறுத்தவரைக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கு என்னென்ன தேவையோ அனைத்தையும் செய்து கொடுத்து கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின் பேரில், சில தொழில்களை தொடங்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வழிகாட்டுதலின்பேரில், சில தொழில்களை தொடங்குவதற்கு கட்டுப்பாடுகளை தளர்த்தப்பட்டு இருக்கின்றன.

தமிழகத்தில் வெளிமாநில தொழிலாளர்கள் அதிகம் பேர் இருக்கின்றார்கள். வெளிமாநில தொழிலாளர்களுக்கு பல்வேறு பகுதிகளிலே சில கட்டுப்பாடுகளுடன் இப்பொழுது பணி துவங்கப்பட்டுவிட்டன. அப்படி பணிபுரிய விருப்பமுள்ள தொழிலாளர்கள் இங்கேயே தங்கிவிடலாம். தங்களுடைய மாநிலத்திற்கு செல்ல வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தால், அவர்களை அந்த இடத்திலேயே, நீங்கள் சென்று, விவரங்களை சேகரித்து, வெளிமாநிலங்களுக்கு செல்வதற்கு தகுந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அந்தப் பணியும் நம்முடைய குழு கவனமாக ஆங்காங்கே பார்த்துக் கொண்டிருக்கிறது.

ஏன்னென்றால் ஒரே இடத்திலே வந்து விட்டால் நமக்கு பிரச்சனை ஏற்பட்டுவிடும். ஆகவே, நாம் ஆன்–லைனில் பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவித்து விட்டோம். இருந்தாலும் அவர்கள் தங்களுடைய சொந்த

மாநிலங்களுக்கு செல்ல வேண்டும் என்று ஆர்வத்தின் காரணமாக எங்கேயாவது ஒரு இடத்தில் கணக்கெடுத்தால் உடனடியாக வந்துவிடுகிறார்கள். அதையெல்லாம் தவிர்க்க வேண்டும், நீங்கள் சுமார் 7, 8, 10 குழுக்களாக அமைத்து, ஆங்காங்கே ஏற்கனவே காவலர்களை நியமித்து, அந்த இடத்திலிருந்து யாரும் வெளியேறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்குபிறகு தான் நீங்கள் கணக்கெடுப்பிற்கே போக வேண்டும். நீங்கள் உடனடியாக கணக்கெடுக்க சென்றால், மற்ற இடங்களுக்கு விவரம் தெரிந்து, உடனடியாக அந்தப் பகுதிகளுக்கு வந்துவிடுவார்கள். அந்தந்த பகுதியில் இருக்கின்றவர்கள் அங்கேயே இருக்க வேண்டும். அந்த குழு எங்கே தொழிலாளர்கள் தங்கி இருக்கிறார்களோ அந்த இடத்திற்கே சென்று அவர்களுடைய விவரங்களை சேகரித்து, அவர்கள் அவர்களுடைய மாநிலங்களுக்கு செல்வதற்கு நீங்கள் வாய்ப்பு ஏற்படுத்திட வேண்டும்.

நான் ஏற்கனவே டிஜிபி அவர்களிடத்திலே கலந்து பேசியிருக்கின்றேன். அவர்களை அழைத்து செல்கின்றபோது, இரவு 10 மணிக்கு மேல் தான் ரயிலிலுக்கு அழைத்து செல்ல வேண்டும். ஏன் என்றால் பகல் நேரத்தில் அழைத்து சென்றால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும். தமிழ்நாட்டில் சுமார் 50,000 பேர் வெளிமாநில தொழிலாளர்கள் இங்கே தங்கி பணிபுரிந்து வருகிறார்கள். 50,000 பேரை ஒரே நேரத்திலே அழைத்து செல்ல வசதி ஏற்படுத்தி கொடுக்க இயலாது. ஏன்னென்றால் ரயில் மூலமாகத் தான் அவர்கள் செல்ல வேண்டும். ஆகவே, எந்தந்த மாநிலத்திற்கு, எந்த தேதியிலே ரயில்கள் இயக்கப்படும் என்ற விவரங்களை எல்லாம் அவர்களிடத்திலே கூறி எந்தந்த தேதிகளில் அவர்களை அழைத்து செல்ல இருக்கிறோம் என்ற விவரங்களை எல்லாம் தெளிவாக சொல்லிவிடவேண்டும். இதை எச்சரிக்கையாக கையாள வேண்டும். அவர்களிடத்திலே தெளிவாக சொல்லிவிடுங்கள். பிற மாநில தொழிலாளர்கள் எங்கெல்லாம் தங்கியிருக்கிறார்கள் என்ற விவரம் நம் கையில் இருக்கிறது. அந்த இடங்களுக்கு சென்று உங்களுக்கு இந்த தேதியில் இத்தனை மணிக்கு ரயில் இருக்கிறது, நாங்களே நேரடியாக அழைத்துச் சென்று உங்களை ரயிலில் ஏற்றிவிடுவோம் என்ற தகவலை கூறிவிட

வேண்டும். அதுவரை யாரும் வெளியில் வரக்கூடாது என்ற தகலையும் தெரிவிக்க வேண்டும். ஒரேநேரத்தில் அனைவரும் அழைத்துச் செல்ல இயலாது. அந்த அளவிற்கு நாம் ரயில் வசதியை செய்து கொடுக்க முடியாது. படிப்படியாக ஒரு வாரத்திற்குள் அவர்களுடைய சொந்த மாநிலங்களுக்கு செல்வதற்கு அரசு வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கும்.

அதேபோல, தனிக்கடைகள் திறக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின்பேரிலே, அதற்கும் தளர்வுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆகவே, மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின்பேரில், தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுகின்றது. தமிழ்நாட்டு மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் அம்மாவுடைய அரசு செய்து கொடுத்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பொதுமக்களை பொறுத்தவரைக்கும், அரசு அறிவிக்கின்ற வழிகாட்டுமுறைகளை பின்பற்ற வேண்டும். வெளியில் சென்றால் கண்டிப்பாக முககவசம் அணிய வேண்டும். அடிக்கடி கைகளை சுத்தமாக சோப்பு போட்டு கழுவ வேண்டும். பொருட்களை வாங்குகின்ற போது சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும். இதை முறையாக பின்பற்றினாலே நோய் பரவலை தடுக்க முடியும். இது மருத்துவ வல்லுநர்களும், மருத்துவ நிபுணர்களும் தெரிவிக்கின்ற கருத்து. அதை பொதுமக்கள் அருள்கூர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து அம்மா உணவகங்களிலும் நாளொன்றுக்கு 7 லட்சம் பேருக்கு உணவு அளித்துக் கொண்டிருக்கின்றோம். சமூக கிச்சன் மூலமாக சுமார் 2 லட்சம் பேருக்கு உணவு அளிக்கின்றோம். மாற்றுத்திறனாளிகளுக்கு உணவளிக்கின்றோம், கர்ப்பிணி பெண்களுக்கு உணவளிக்கின்றோம், ஆதரவற்றோர்களுக்கு உணவளிக்கின்றோம்,

முதியோர்களுக்கு உணவு அளித்து கொண்டிருக்கின்றோம். ஆகவே, தமிழகத்தில் எவரும் பட்டினி இல்லை என்ற நிலையை எங்களுடைய அரசு உருவாக்கி இருக்கிறது என்பதை தெரிவித்து கொள்கின்றேன்.

தொழிலாளர்களுக்கு தேவையான நிவாரண உதவிகளையும் செய்திருக்கின்றோம். சுமார் 36 லட்சம் பேர்களுக்கு கருணைத் தொகை கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு விலையில்லா அரிசி, பருப்பு, சர்க்கரை கொடுக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்களுக்கு அனைத்து அரிசி வாங்குகின்ற குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. விலையில்லா அரிசி கொடுக்கின்றோம், விலையில்லா பருப்பு, விலையில்லா சர்க்கரை, விலையில்லா எண்ணெய் கொடுக்கப்படுகிறது. ஏப்ரல் மாதமும், மே மாதமும் தொடர்ந்து வழங்கப்படும். அதேபோல ஜூன் மாதமும் தொடர்ந்து வழங்கப்படும். இன்றைக்கு அரிசி விலையில்லாமல் கொடுக்கப்படும். மே மாதத்திற்கும் கொடுக்கப்படும், ஜூன் மாதத்திற்கும் கொடுக்கப்படும். சர்க்கரை, பருப்பு, எண்ணெய் அனைத்துமே விலையில்லாமல் அம்மாவுடைய அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆகவே, இன்றைக்கு அரசு கண்ணை இமை காப்பது போல, மக்களை காத்து வருகிறது. இந்த சோதனையான நேரத்திலே, மக்கள் அரசு அறிவிக்கின்ற அறிவிப்பை முறையாக கடைப்பிடித்தாலே, நோய் பரவலை தடுக்க முடியும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

மீண்டும், மீண்டும் மக்களை வேண்டி கேட்டுக் கொள்வது, இருகரம் கூப்பி வேண்டி கேட்டுக் கொள்வது, நீங்கள் அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை பின்பற்ற வேண்டும், கண்டிப்பாக வெளியிலே செல்கின்ற போது முககவசம் அணிய வேண்டும். அதேபோல அடிக்கடி சோப்பு போட்டு கைகளை கழுவ வேண்டும். பொருட்களை வாங்குகின்ற போது, காய்கறி மார்க்கெட்டிற்கு சென்றாலும் சரி,

மளிகைக் கடைகளுக்கு சென்றாலும் சரி அல்லது வங்கிகளுக்கு சென்றாலும், சமூக இடைவெளியை பின்பற்றி நீங்கள் வரிசையில் நின்று பொருட்களை வாங்கிச் சென்றால் நிச்சயமாக இந்த கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவலை தடுக்க முடியும். அதற்கு நீங்கள் அரசிற்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று பொதுமக்களை வேண்டி அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**